களை அரசு எடுத்து வருகிறது. மேலும் புதுக் கட்டிடம் கட்டுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம நாங்கள் டிசம்பர் மாதம் தெரிவித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தகுந்த நிலங்கள் கிடைக்குமானால் அதன்மீது நடவடிக்கை எடுத்துப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முன்னோடிப் பயிற்சி நிலையத்தைப் பொறுத்தவரையில் 50:50 என்ற வகையில் பாதியை மைய அரசு அந்தச் செலவினங்களில் ஏற்றுக் கொள்கிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் இந்த நிலையத்தில் ஐ.ஏ.எஸ். பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதுவரையில் இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் தேர்ச்சி பெற்று ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை 41 பேர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு பேர் தேர்வு பெற்ற இறுதி நேர்முகத் தேர்வுக்குச் செல்ல உள்ளனர்.

பழங்குடி மக்களுக்காக அதிக அளவில் அரசு பள்ளிகள் துவக்கும் திட்டம்.

*வினா எண் 737 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழங்குடி சமுதாயத்திற்கு என புதிதாக அதிக அளவில் அரசு பள்ளிகள் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பழங்குடி மக்களுக்காக 1977–78 ஆம் ஆண்டிலிருந்தே கணிசமான அளவில் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆண்டும், பள்ளிகள் எண்ணிக்கையும் கீழே தரப் பட்டுள்ளன:

ஆண்டு	பள்ளிகள் எண்ணிக்கை.	
1977—78	7	
1978—79	9	
1979—80	10	
1980—81	10	
1981—82	12	புதிதாகத் துவக்கப் பட்டுள்ளன.
ஆக மொத்தம் ..	48	

திரு. இரா. தாமரைக்கனி:—பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பள்ளிக்கூடங்களை அதிக அளவில் கட்டினாலும்கூட அவர்கள் வாழ்கின்ற பகுதி மலைப் பகுதியாக இருப்பதால் சாலை வசதிகள் இல்லாத பகுதிகளாக இருப்பதால் குழந்தைகள் விரும்பிப் பள்ளிகளுக்கு வருவதில்லை. எனவே குழந்தைகள் அதிக அளவில் பள்ளிக்கு வருகின்ற அளவில் குதிரைகளையும், கழுதைகளையும் வழங்கி அதன்மூலம் மாணவர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:—மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலைகள் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் தற்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் பழங்குடிகள் துணைத் திட்டத்தின் கீழ் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் மிகச்சிறப்பாக அவர்கள் சென்று வருவதற்கான சாலை வசதிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கும் குறைகள் இல்லை. மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்வதற்குக் குதிரைகள் வழங்க வேண்டுமென்று கருத்து தெரிவிக்கிறார்கள். அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி மாணவர்களைப் பல்வேறு முறைகளிலே கவரும் நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மென்றால் என்னுடைய தொகுதியில் உள்ள செண்பகத்தோப்பு பகுதியில் மதிய உணவு அளிக்கப்படும். பிள்ளைகளுக்கு மூக்குப்பொடி வழங்கப்படுகிறது. மூக்குப்பொடி வழங்குவதை நிறுத்தினால் மாணவர்கள் பள்ளிக்கு வருவதில்லை. எனவே, இத்தகைய தீய பழக்கங்களிலிருந்து அந்த மாணவர்களை விடுவித்துக் கல்விக்கண் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம்உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கும் குறைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. உறுப்பினரவர்கள் தெரிவிப்பார்களேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி சமுதாயத்திற்கு எனத் தனியாகப் பெண்களுக்கென அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று நிறுவுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வருங்காலத்தில் அதுபற்றி முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரைச் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].